தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1993, ஏப்ரல் 12, திங்கட்கிழமை

பங்குனி 30, ஆங்கீரச, திருவள்ளுவர் ஆண்டு 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு."

ஊற்று நீர், மழை நீர், மலைகள், ஆற்று நீர், வலுவான கோட்டை ஆகியவை ஒரு நாட்டிற்குச் சிறந்த உறுப்புகளாகும்.

1. வினாக்கள் - விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள். வினா எண் 301, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

301—

இளநிலை பட்ட ஆசிரியர் பயிற்சி முடித்துள்ள ஆசிரியர்கள்

*11213—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1990 டிசம்பர் முடிய தமிழகத்தில் இளநிலை பட்ட ஆசிரியர் பயிற்சி (B. Ed.) முடித்து பணியின்றி இருக்கும் ஆசிரியர் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்களின் உடனடி வேலை வாய்ப்பிற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1993 ஏப்ரல் 12

(அ) 1990 டிசம்பர் முடிய தமிழகத்தில் 60,127 ஆசிரியர்கள் பயிற்சி முடித்து பணிவாய்ப்புப் பெற வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

(ஆ) அரசு வருடா வருடம் புதிய பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தோற்றுவிப்பதன் மூலமும் அவ்வப்போது ஏற்படும் காலியிடங்களில் பட்டதாரி ஆசிரியர்களை புதியவர்களாக தேர்வு செய்து நியமனம் அளிப்பதன் மூலமும் பி.எட். பயிற்சி முடித்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் 60 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்சி பெற்று, வேலையில்லாமல் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அந்த ஆசிரியர்களுக்கு இன்னும் நேர்முகத் தேர்வு வந்தபாடில்லை. அந்தச் சூழ்நிலையிலே 60 ஆயிரம் பேர் படித்து, வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு எந்தச் சூழ்நிலையில், ஆண்டுக்கு எத்தனை பேருக்கு வேலை தரக்கூடிய சூழ்நிலையை அரசு எண்ணியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்தவர்களுக்கு எல்லாம் அரசு வேலை தருவது என்பது அரசிடத்திலே இல்லை. எல்லா அரசுகளும் இந்த மாதிரி வேலைவாய்ப்புத் தர முடியாது. அரசுத் துறையிலேயும், அரசுப் பள்ளிகளிலேயும் வேலை கொடுக்கலாம்; அல்லது தனியார் துறையிலேயும் வேலை கொடுக்கலாம். ஆகவே, அங்கே போய் அவர்கள் வேலை செய்து கொள்ளலாம். இந்தப் பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், அரசுப் பள்ளிகளிலே பி. எட். பட்டம் பெற்ற இளநிலை ஆசிரியர்கள் பல பேர் இருக்கிறார்கள். ஆகவே, 50 சதவிகிதம் அவர்களிடமிருந்து நாம் எடுக்கிறோம்; 50 சதவிகிதம்தான் வெளியிலே இருந்து எடுக்கிறோம். ஆகவே எல்லோருக்கும் அரசாங்கமே வேலை தருவது என்பது சாத்தியமில்லை. எனவே, அவர்கள் தனிப்பட்ட முறையிலே வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளலாம்.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 60 ஆயிரம் பேர் இப்போது வேலைவாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலையில், தொடர்ந்து இந்த அரசு ஆண்டுதோறும் பி. ஏ. படித்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறது. இந்த முற்றுப்பெறாத ஒரு சூழ்நிலையில், இன்னும் 15 ஆண்டுகளானாலும், 20 ஆண்டுகளானாலும், அந்த ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பே இல்லை என்கிற ஒரு சூழ்நிலை

1993 ஏப்ரல் 12]

வருகிறபோது, தொடர்ந்து அவர்களுக்கு அரசு ஆசிரியர் பயிற்சி கொடுத்துக் கொண்டிருப்பது, 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்ற ஒரு சூழ்நிலையைத்தான் ஏற்படுத்தும். ஆகவே, அவர்களுக்கு ஏதாவது மாற்றுத் திட்டம் இந்த அரசு வைத்திருக்கிறதா; அல்லது அவர்கள் 40 வயதானாலுங்கூட, அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலையில், ஏன் அநாவசியமாக அவர்களைப் பயிற்சிப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைக்க வேண்டும்; ஒரு உத்தரவாதம் இல்லாத சூழ்நிலையை ஏன் உருவாக்க வேண்டும் என்பதை அரசு மிகத்தெளிவாக விளக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எல்லாம் பட்டதாரிகள். அவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்றால், இனி இது போன்ற படிப்பு படிக்கக்கூடாது; இது போன்ற பயிற்சிக்கு நாம் போகக்கூடாது என்கிற அளவுக்கு நிலைமையைத் தெரிந்து படிக்காமல் இருக்கிற அளவுக்கு அறிவு படைத்தவர்கள்தான் அவர்கள் எல்லோரும். ஆனால், அரசுப் பள்ளிகளில் எல்லா வேலையையும் கொடுக்க முடியவில்லை என்பதற்கான கணக்கைத்தான் நான் கொடுக்க முடியுமே தவிர, தனிப்பட்ட முறையிலே ஏராளமான பள்ளிகள் இருக்கின்றன; அதிலே எல்லாம் அவர்கள் சேர்ந்தால், அந்தக் கணக்கு வராது. அப்படி எல்லாம் வேலை செய்து கொண்டும் இருக்கிறார்கள். இப்போது இருக்கிற சூழ்நிலையிலே, நமக்கு நிறைய பேரை அமர்த்த வேண்டிய சூழ்நிலை இருந்தும், நம்மிடத்திலே நிதியாதாரம் இல்லாத காரணத்தினால், நாம் ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்தாமல் இருக்கிறோம். அதோடு கூட, எதிர்காலத்தைப் பற்றி நாம் நினைத்துப் பார்க்கிறபோது 2020—இல் மக்கள் தொகை இரண்டு மடங்காகும் என்று சொல்கிறபோது, பள்ளிகளும் இரண்டு மடங்காகும் என்ற நிலைமைதான் உருவாகிக் கொண்டிருக்கிறதே தவிர, வேலை இல்லை என்ற நிலைமை இல்லை. அதிலே இன்னொரு குறைபாடு என்னவென்றால், பெரும்பாலும் இவர்கள் தனிப்பட்ட முறையிலே 'கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ்' படித்த மாணவர்களாகத்தான் இருக்க முடியும். அரசுப் பயிற்சிப் பள்ளிகளிலே படித்தவர்கள் இவ்வளவு பேர் வந்திருக்க முடியாது. அவர்கள் பெரும்பாலும் தமிழும், சரித்திரமும், எந்தப் பாடம் சுலபமாக இருக்கின்றதோ அதைப் படித்திருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய பள்ளிகளுக்கு அதிகம் தேவை இருக்காது. கணக்கு, விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர்கள்தான் தேவையாக இருக்கும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டதாரி ஆசிரியர்கள் என்ற உடன், எல்லாவற்றையும் ஒரே மாதிரியாக நினைத்துக் கொண்டு, இந்த பிரச்சினையை அணுகக் கூடாது. அது சரியாக இருக்காது. படித்து விட்டு இவ்வளவு பேர்கள் வேலையில்லாமல் இருப்பதனாலேயே பயிற்சிக் கல்லூரிகளை மூடிவிட வேண்டும் என்கிற யோசனை சரியல்ல.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் நியமனத்தில் சீனியாரிட்டி அடிப்படை இல்லாமல் அனைத்து 60,000 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் இன்டர்வியூ அனுப்பி, தகுதியின் அடிப்படையில், திறமையின் அடிப்படையில் தேர்வு செய்ய அரசு முனவருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியின் அடிப்படையிலேயும் திறமையின் அடிப்படையிலேயும்தான் இப்போது நாம் ஆசிரியர்களைத் தேர்வு செய்கின்றோம். கூப்பிடுகின்றபோது அங்கு யார் யார் தகுதி படைத்தவர்களோ அவர்களையெல்லாம் கூப்பிட்டு, ஜாதி அடிப்படையிலான விகிதாச்சாரத்திற்குட் பட்டு திறமையின் அடிப்படையில் நாம் நியமிக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்ல தம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.எட். பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு பரவலாக இருக்கின்ற காரணத்தினாலேயும் கிராமப்புறங்களில் இருக்கின்ற உயர்நிலைப்பள்ளிகளில் இருக்கின்ற மாணவர்களின் கல்வித்தரம் குறைந்திருப்பதைக் கருத்தில் கொண்டும், ஏதாவது குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்து, கிராமப்புற அரசுப் பள்ளிகளில் எல்லாம் ‘டியூட்டர்’ என்ற ஒரு பதவியை ஏற்படுத்தி, ஒரு பள்ளிக்கு 4 அல்லது 5 ‘டியூட்டர்களை’ நியமனம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த சம்பளத்திலே ஒருவரை வேலைக்கு அமர்த்தி வேலை வாங்குவது என்பது அரசே அதைச் செய்கின்றபோது அது தப்பான முன்மாதிரியாக ஆகிவிடுகின்றது. அதனால்தான், ‘காண்டிராக்ட் டீச்சர்ஸ்’ என்ற அந்தப் பழக்கத்தை எல்லாம் இந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு ஒழித்தது. அதைக் கொண்டுவந்த காலத்திலேயே ஆசிரியர்களே எதிர்க்கவில்லை. நாம்தான் எதிர்த்தோம். எதிர்த்துப் பேசினோம். இப்போது அதை ஒழித்து இருக்கின்றோம். மறுபடியும் கொண்டுவரச் சொல்லி இதே அரசைக் கேட்டால் நாம் சொல்லக்கூடிய பதில், அந்தப் பழக்கத்தை நாங்கள் மறுபடியும் கொண்டுவர மாட்டோம். ஆனால் சிலபேர் ஒன்றைக் கேட்கின்றார்கள். ஏன், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் வேலை பார்க்கின்ற அந்தப் பணியிடத்திற்கு அவர்களை மட்டும்தானே நியமிக்கிறீர்கள். சில பள்ளிகளில்

1993 ஏப்ரல் 12]

பி.டி. ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்கிறார்களே, ஏன் அதற்கு அந்த செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சியைக் குறைந்தபட்ச பயிற்சியாக வைத்து அவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை ஏன் தரக்கூடாது என்கிற முறையிலே சில கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அதைப்பற்றி நாம் பரிசீலிக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளான்கள் போல' இன்று நர்சரிப் பள்ளிகள் இருந்து கொண்டிருக்கின்றன. நர்சரிப் பள்ளிகளிலே பயிற்சி இல்லாதவர்கள்- பி. எட். படித்தவர்கள், டிரெயினிங் படித்தவர்கள் எல்லாம் இல்லாமல்—அமர்த்தப்பட்டு இன்று கல்வித் தரம் குறைந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தனியார் நடத்துகின்ற மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும், நர்சரிப் பள்ளிகளிலும், பி. எட். படித்தவர்கள் அங்கே ஆசிரியர்களாகப் பணியாற்ற முடியும் என்ற ஒரு நடவடிக்கையை எடுத்தால், கல்வியினுடைய தரம் உயரும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நர்சரிப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் அங்கே எல். கே. ஜி., யு. கே. ஜி., 1-வது முதல் பெரும்பாலும் 5-வது வகுப்புவரை வைத்திருக்கிறார்கள். அதற்கு மேலே மற்ற உயர்நிலைப் பள்ளிகளுக்கு வந்து விடுகிறார்கள். 5-வது வகுப்புவரை சொல்லித் தருவதற்கு இடைநிலை ஆசிரியர் போதும் என்றுதான் இப்போது நாம் வைத்திருக்கின்றோம். அந்த முறையிலே பார்க்கின்ற போது அவர்களைப் போய் பி. எட். படித்தவர்களை வைத்துக் கொள்ளுங்கள் என்று நாம் சொல்ல முடியாது. ஆகவே, தகுதியுள்ள ஆசிரியர்களை வைத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் நாம் சொல்லமுடியும். அப்படிப்பட்ட உத்தரவு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 302. டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

302—

குளத்தூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தல்.

* 11380—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: